* 322 *Q.*—Thiru L. BALARAMAN (on behalf of Thiru S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to undertake a study of valuable bronze idols in temples; and

(*b*) if so, the details thereof?

கடவுளர் சிலைகள்.

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) கோயில்களில் உள்ள விலை மதிப்பற்ற வெண்கல விக்கிரகங்கள் பற்றி ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இம்மாநிலத்தின் கோயில்களிலுள்ள பழம் பொருட்கள், கலைச் செல்வங்கள் மற்றும் செப்புத் திருமேனிகளை கணக்கு எடுக்கும்படி அரசு 1973 அக்டோபரில் ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தின் கோயில்களிலுள்ள செப்புச் சிலைகள் படம் எடுக்கப்பட்டு அவற்றைப் பற்றிய விளக்கங்கள் எழுதப்பட்டு பட்டியல் தயாரிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Graduate Teachers

* 323 *Q.*—Thiru M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of graduate teachers working in Government High Schools under rule 10 (*a*) (1);

(*b*) among them the number of teachers who have been working for more than two years;

(*c*) whether any representation has been received from them to regularise their services; and

(*d*) if so, the action taken thereon?

1974 ஏப்ரல் 23]

பட்டதாரி ஆசிரியர்கள்

திரு. எம். சங்கரலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசு உயர்நிலைப்பள்ளிகளில் 10 (a) (1) ஆக வேலை பார்த்து வரும் பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் 2 வருடங்களுக்கு மேல் வேலை பார்ப்பவர்கள் எத்தனை பேர்?

(உ) அவர்களிடமிருந்து வேலையில் நிரந்தரமாக்க வேண்டுமென்று முறையீடு வந்ததுண்டா?

(எ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 362.

(இ) ஒருவரும் இல்லை.

(உ) & (எ) இப்பதவிகளில் முறையாக நியமனம் பெறுவதற்கு தமிழ் நாடு தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். அவ்வாறு தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் தான் அப்பதவிகளில் முறையாக நியமனம் செய்யப் படுவர்.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, 312 ஆசிரியர்கள் 10-ஏ (1)-ல் நியமிக்கப்பட்டு, இரண்டு வருஷத்திற்கு மேல் பணியில் இருப்பவர்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் அந்த 10-ஏ (1) என்ற காரணத்திற்காகவே இரண்டு வருஷத்திற்கு மேல் பணி புரிந்து வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களிடமிருந்து அரசுக்கு ஏதேனும் மனுக்கள் வந்திருக்கின்றனவா? அவர்களுக்கு சர்வீஸ் கமிஷனில் முன்னுரிமை வழங்க அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 1—4—1970 முதல் 3—3—1973 வரை நியமிக்கப்பட்ட 3,000 தற்காலிக ஆசிரியர்களில் 2,320 பேர் தேர்வு ஆணைக்குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர். மீதியுள்ள சுமார் 700 பேர் தமிழ்நாடு தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்படாவிட்டாலும், 3—3—1973 அரசு ஆணையின்படி அவர்களுக்குத் தனிச்சலுகை காட்டப்பட்டு அவர்கள் பணியை வரைமுறைப்படுத்த அரசு முன் வந்துள்ளது. அவர்களைப் பொறுத்த வரையில், தேர்வு ஆணைக் குழுவின் ஒப்புதல் பெறப்படும். தேர்வு ஆணைக்குழுவின் ஒப்புதல் பெறவேண்டியது அவசியமாக இருக்கிறது.

[1974 ஏப்ரல் 23

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இந்த 10 (ஏ) (1)-ன்படி நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் காயம் செய்யப்படுவதற்கு எத்தனை ஆண்டுகள் அவர்கள் வேலை செய்தாக வேண்டும் என்பதற்கான கொள்கைக் குறிப்பு ஏதாவது உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இவ்வளவு ஆண்டு தற்காலிகமாக வேலை செய்ய வேண்டுமென்ற தன்மைகள் இல்லை. தேர்வு ஆணைக்குழு எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகத் தேர்ந்தெடுக்கிறதோ அவ்வளவு விரைவில் நடைபெறும். ஆணைக்குழுவை விரைவுபடுத்துகிற முயற்சியில் தான் அரசு இப்போது ஈடுபட்டிருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, தனியார் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களை ஒரு ஆண்டு காலத்திற்கு மேலாக தற்காலிக வேலையில் அமர்த்திக்கொள்ள முடியாது. இருந்தும், அரசாங்கப் பள்ளிகளிலே ஆசிரியர்களை பல ஆண்டு காலத்திற்கு தற்காலிகமாக வைத்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் தேர்வு ஆணைக்குழுவில் தாமதம் ஏற்படுகிறதா, அல்லது அவர்கள் தகுதி இல்லாமல் இருக்கிறார்களா? 26 வயதுக்கு மேற்பட்டால் தேர்வு ஆணைக்குழுவிற்குச் செல்லமுடியாது. அப்படியிருக்கும்போது அவர்கள் தற்காலிகமாக இருந்து விட்ட காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தேர்வு ஆணைக்குழுவினுடைய காலத்தாழ்வு காரணமாக நீட்டிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே காலத்தாழ்வு ஏற்படாமல் தடுப்பதற்கு என்ன வழி வகை செய்யலாம் என்பதைப்பற்றி கல்வித் துறையினுடைய செயலாளர் தேர்வு ஆணைக் குழுவிடம் இதுபற்றிப் பேசி விரைவுபடுத்த முயற்சி எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். தற்காலிகமாக அந்தந்த ஆண்டு நியமிக்கப்பட்ட பிறகு, கோடை விடுமுறையில் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்படுகிற காரணமாக அவர்கள் மீண்டும் அதே பள்ளியில் அல்லது வேறு பள்ளியில் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள்.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இங்கே அமைச்சரவர்கள் குறிப்பிடும்போது, 3—3—1973 நாளிலிருந்து ஏற்கெனவே தாற்காலிகமாக வேலை செய்தவர்கள் சர்வீஸ் கமிஷனுக்குச் செல்லவேண்டியதில்லை என்று வரன்முறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்று கூறினார்கள். 'பி' விங்கில் பணியாற்றக்கூடிய 'ஏ' விங் போஸ்டில் இருக்கக்கூடியவர்களுக்கு மட்டும் வரன்முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. 'ஏ' விங் பள்ளியில் வேலை செய்யக்கூடிய 'ஏ' விங் போஸ்டில் இருக்கக் கூடியவர்களுக்கு இது அமலாக்கப்படாததன் காரணம் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, 'ஏ' விங்கில் தொடர்ந்து ஒரு விதி முறை இருந்து வருகிறது. அதைத் தான் அவர்கள் கடைப்பிடித்துத் தீரவேண்டும். 'பி' விங்கில் தான் இந்த சங்கடம் ஏற்பட்டது. ஏற்கெனவே 'பி' விங்கில் இருப்பவர்கள் தேர்வு ஆணைக்குழு விற்குப் போகவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அரசாங்கம் ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு 1—4—1970 முதல் அரசாங்கம் பள்ளிகளைப் பின்பற்றி தேர்வு ஆணைக் குழுவிற்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. காலத்தை நீட்டித்ததன் காரணமாக 1—4—1970 முதல் 3—3—1973 வரை அத்தனை பேர்களையும் நாம் எடுத்துக்கொள்வது என்று கொடுத்த வாக்குறுதியின் அடிப் படையில் தேர்வு ஆணைக்குழு எத்தனை பேர்களை தேர்ந்தெடுக்கிறதோ அவ்வளவு பேர்களை அவர்கள், தேர்ந்தெடுக்கட்டும் என்று இருந்தோம். 2,320 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டனர். மீதி 700 பேர்களை நாம் கொடுத்த வாக்குறுதிக்கு இணங்க அரசாங்கம் ஏற்றுக்கொள்ள இசைந்தது. நாம் இசைந்தாலும் இதற்கு தேர்வு ஆணைக்குழு ஒப்புதல் தர வேண்டும். இதற்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எல்லாம், 'ஏ' விங்கானாலும் 'பி' விங்கானா லும் ஆணைக்குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

திரு. கே. எஸ். கணபதி: 3-3-1973 அன்று 3,157 பட்டதாரி ஆசிரியர் கள் வரன்முறைப்படுத்தப்படுவதாக உத்திரவாதம் அளிக்கப்பட்டது. ஆனால் அந்தத் தேதிக்கு முன்னதாக அப்ரெண்டிஸ் ஆசிரியர்களாக இருந்தவர்கள் அந்தத் தேதிக்குப் பிறகு ரெகுலர் பி.டி. அசிஸ்டெண்டுகளாக நியமிக்கப்பட் டார்கள். அவர்களுடைய பணி வரன்முறைப்படுத்தப்படவில்லை. இதற்கென தனி ஆணை பிறப்பிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இதுபற்றி விவரக் குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

MR. CHAIRMAN: Is the hon. Member Thiru Rajagopal going to ask any question?

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, எம்.ஏ. பட்டம் பெற்று 8 மாத காலம் ஒரு கல்லூரியில் அசிஸ்டெண்டு புரொபசராக வேலை செய்த பிறகு, சர்வீஸ் கமிஷன் இண்டர்வியூக்கு அனுமதி வேண்டுகிறபோது, அவர் 6 மாதம் வேலையில் இருந்தும் கூட அவருடைய சர்வீஸ் கமிஷன் விண்ணப்பத்தை ரிஜெக்ட் செய்து விடுகிறார்கள். நம் ஆட்சியினுடைய அடிப்படைக் குறிக் கோள் கட்டை வண்டி ஓட்டுகிறவர்கள், இப்படிப்பட்ட பிற்பட்ட மக்களுக்கு அனுகூலம் செய்யவேண்டுமென்பது. ஆனால் அந்த லட்சியத்தை மீறி சர்வீஸ் கமிஷன் ½ மார்க் 1 மார்க் குறைவாக இருக்கிறது என்ற காரணத்திற்காக,

அவர் எம்.ஏ. பட்டம் பெற்று, 8 மாதம் வேலை செய்த பிறகும், ரிஜெக்ட் செய்து அவரை வீட்டிற்கு அனுப்பிவிடுகிறார்களே. தேவை இருக்கிறபோது நாம் அவரை அழைத்து வேலை தருகிறோம். ஆனால் பிறகு ரிஜெக்ட் செய்கிறோம்.

MR. CHAIRMAN : Supplementaries must always be short.

திரு. சி. வி. ராஜகோபால் : இப்படிப்பட்ட முறைகளைத் தளர்த்துவதற்கு வழி வகை பிற்பட்ட மக்களுக்குச் செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வரைமுறைகள் சில இருக்கின்றன என்ற காரணத்தினால், வரைமுறைப்படி நடக்கவேண்டிய அவசியம் தேர்வு ஆணைக்குழுவிற்கு ஏற்படுகிறது. ஆணைக்குழு சில பல முறைகளையும், தகுதிகளையும் வைத்திருக்கிறது. அதில் குறைவு ஏற்படுமானால், ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளாது. அப்படித் தளர்த்திக் கொடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுமானால், தனிச் சலுகை கொடுக்க வேண்டும். அதற்கு அரசாங்கத்திற்கு விண்ணப்பித்து, பிறகு அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறது என்பதை தேர்வு ஆணைக்குழுவிற்குத் தெரிவித்தால், அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் சில சமயங்களில், வயது வரம்பைத் தாண்டுகிறபோதும், 1 மார்க் ½ மார்க் அளவிற்குக் குறையும்போதும் தனிச் சலுகை பெறுகிற வாய்ப்பு இருக்கிறது. அவர்கள் தனியாக அரசாங்கத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பத்தைப் பெற்று, அரசாங்கத்தினிடம் தனிச் சலுகை பெற்று தேர்வுக் குழுவிற்குச் செல்ல வேண்டும். தேர்வு ஆணைக்குழு விதித்திருக்கிற முறைப்படி நடக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, நீண்ட காலத்திற்கு முன்னால் இந்த சர்வீஸ் கமிஷன் முறை வைக்கப்பட்டிருந்தது. இன்றைக்கு யுனிவர்சிடியில் சரியான அடிப்படையில் படித்துப் பட்டம் பெறுகிறார்கள். பயிற்சிக் கல்லூரிக்கு விண்ணப்பித்து பயிற்சிக் கல்லூரியில் பட்டம் தரப்படுகிறது. இரண்டு பட்டங்கள் பெற்ற பிறகு, டெக்னிகலி கவாலிஃபைட் என்ற அளவிற்கு இருக்கிறார்கள். இதன் பிறகும், சர்வீஸ் கமிஷன் தேர்வு முறை தேவையா என்று கேட்டு தேவையில்லையென்ற முடிவிற்கு அரசு முடிவெடுக்க முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன். இது நீண்ட காலத்திற்கு முன்னால் இருக்கிற முறை என்பதால், நல்ல முறையில் கல்வி கற்றவர்கள் மீண்டும் சர்வீஸ் கமிஷனுக்குச் செல்லவேண்டிய அவசியம் தேவைதானா என்பதை மறுபரிசீலனை செய்து அரசு முடிவெடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது ஒரு கொள்கைப் பிரச்சினை. ஆணைக்குழு இல்லையென்றால் எவ்வளவு இடங்கள் இருக்கிறதோ அவ்வளவு இடங்களுக்குத்தான் நாம் பி.டி. ஆசிரியர்களைத் தயாரிக்க முடியுமே தவிர, வேறு நிலை இருக்க முடியாது. பி.டி. ஆசிரியர்களாக 16 ஆயிரம் பேர்களைத் தயாரித்து விட்டு, 500, 1,000 இடங்களுக்குத்தான் ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள் என்கிறபோது தேர்ந்தெடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எவ்வளவு இடங்கள் காலி இருக்கிறதோ, அப்படிக் காலி ஏற்படுகிற அளவிற்கு இடங்களை ஒதுக்குகிற நிலை ஏற்பட்டால், இந்த ஆணைக்குழு அவசியமில்லை, இங்கேயே தேர்ந்தெடுத்துவிட்டோம், மறுபடி தேர்ந்தெடுக்கவேண்டிய அவசியமில்லை என்ற நிலை ஏற்படும். இது கொள்கைப் பிரச்சினையாக இருப்பதன் காரணமாக வேறு சொல்ல முடியாது. பி.டி. படித்தவர்கள் 6 ஆயிரம் பேர்கள் இருக்கக் கூடும். நமக்குத் தேவைப்படுபவர்கள் 600 பேர்கள் அல்லது 700 பேர்கள் இருக்கக்கூடும். இப்படி 600 பேர்களைத் தேர்ந்தெடுக்கும்போது இப்படிப்பட்ட ஆணைக்குழுவின் பணிகள் தேவைப்படுகின்றன.

Part-time Lecturers

* 324 Q.—Thiru K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the pay of the part-time Lecturers in Law, in the Law College, Madras, and that of the part-time Lecturers in Mercantile Law in the Arts Colleges in the State, are different; and

(*b*) if so, whether the Government will consider revising the consolidated pay of the latter with that of the former?

பகுதி நேர விரிவுரையாளர்கள்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை, சட்டக் கல்லூரியில் சட்டம் (Law) பற்றி போதிக்கும் பகுதி நேர விரிவுரையாளர்களின் சம்பளமும், இம்மாநிலத்திலுள்ள கலைக் கல்லூரிகளில் வணிகச் சட்டம் (Mercantile Law) பற்றி போதிக்கும் பகுதி நேர விரிவுரையாளர்களின் சம்பளமும் வெவ்வேறாக உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், கலைக்கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்களது மொத்த சம்பளத்தை, சட்டக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்களது சம்பளத்துக்கு இணையாக திருத்தியமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா ?